# 13-01-2023 செய்தி

## இந்திய நிறுவனத்தின் 2 இருமல் மருந்துகளை பயன்படுத்த வேண்டாம் : உலக சுகாதார நிறுவனம்

- உஸ்பெகிஸ்தானில் 18 குழந்தைகள் உயிரிழப்புக்கு காரணமாக குற்றம் சாட்டப்பட்ட இந்திய நிறுவனத்தின் 2 இருமல் மருந்துகளையும் தரமற்றவை என்று குறிப்பிட்டுள்ள உலக சுகாதார நிறுவனம் (டபிள்யுஹெச்ஓ), அவற்றை பயன்படுத்த வேண்டாம் என்று எச்சரித்துள்ளது.

**மேரியன் பயோடெக்**

- உத்தரப்பிரதேச மாநிலம், நொய்டாவைச் சேர்ந்த மேரியன் பயோடெக் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட அம்ப்ரோனால், டோக்-1 மேக்ஸ் ஆகிய இருமல் மருந்துகளுக்கு இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
- இதனிடையே, மேரியன் பயோடெக் நிறுவனத்தின் உற்பத்தி உரிமத்தை முடக்கி, மாநில அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.
- உஸ்பெகிஸ்தானில் டோக்-1 மேக்ஸ் இருமல் மருந்தை எடுத்துக் கொண்டதால், 18 குழந்தைகள் இறந்ததாக அந்நாட்டு சுகாதார அமைச்சகம் அண்மையில் குற்றம்சாட்டியது.
- அத்துடன், மருந்தில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் எத்திலீன் கிளைக்கால் ரசாயனம் ஏற்க இயலாத அளவில் இருப்பது கண்டறியப்பட்டதாகவும் அந்த அமைச்சகம் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.
- மேரியன் பயோடெக் நிறுவனம், டோக்-1 மேக்ஸ் மற்றும் அம்ப்ரோனால் ஆகிய இருமல் மருந்துகளை, உஸ்பெகிஸ்தானுக்கு ஏற்றுமதி செய்வதற்கு மட்டுமான உரிமத்தைப் பெற்றதாகும்.
- இந்தியாவில் இந்த இருமல் மருந்துகளை அந்நிறுவனம் விற்பனை செய்வதில்லை.
- உஸ்பெகிஸ்தானின் குற்றச்சாட்டைத் தொடர்ந்து மத்திய மருந்து தரக் கட்டுப்பாட்டு அமைப்பு மற்றும் மாநில மருந்து கட்டுப்பாட்டுத்துறை அதிகாரிகள் அடங்கிய கூட்டுக்குழுவினர், மேரியன் பயோடெக் நிறுவனத்தில் கடந்த டிசம்பர் 29-ஆம் தேதி நேரில் ஆய்வு மேற்கொண்டு மாதிரிகளை சேகரித்தனர்.
- அவை, சண்டீகரில் உள்ள பிராந்திய மருந்துகள் பரிசோதனை ஆய்வகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டன.
- மேலும், இருமல் மருந்து உற்பத்தியை உடனடியாக நிறுத்தவும் அந்த நிறுவனத்துக்கு உத்தரவிடப்பட்டது.

**டபிள்யுஹெச்ஓ எச்சரிக்கை**

- அம்ப்ரோனால் மற்றும் டோக்-1 மேக்ஸ் ஆகிய 2 இருமல் மருந்துகளும் உரிய தரநிலைகளை பூர்த்தி செய்வதில் தோல்வியடைந்துள்ளன.
- இந்த மருந்துகளின் பாதுகாப்பு மற்றும் தரம் குறித்து உற்பத்தி நிறுவனத்திடம் இருந்து இதுவரை எந்த உத்தரவாதமும் உலக சுகாதார நிறுவனத்துக்கு கிடைக்கப் பெறவில்லை.
- உஸ்பெகிஸ்தான் சுகாதார அமைச்சகத்தின் ஆய்வகங்களில் நடத்தப்பட்ட சோதனைகளில், இருமருந்துகளிலும் ஏற்கமுடியாத அளவுக்கு டைஎத்திலீன் கிளைக்கால் மற்றும் எத்திலீன் கிளைக்கால் மாசு இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.
- இந்த ரசாயனங்கள், மனித நலனுக்கு ஆபத்தை விளைவிக்கக்கூடியவை என்பது நிரூபிக்கப்பட்டதாகும்.

## காலநிலை மாற்றம்

- காலநிலை மாற்றத்தால் பாதிக்கப்படும் மக்களின் எண்ணிக்கையில் உலக அளவில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது என தேசியப் பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் முன்னாள் ஆலோசகர் வி.திருப்புகழ் தெரிவித்துள்ளார்.
- பேரிடர்களால் ஏற்படும் அபாயங்கள் குறித்து இந்தியர்களிடையே விழிப்புணர்வு இல்லை பொறுப்பற்ற திட்டமிடல், வளர்ச்சி நடவடிக்கைகளால், குறிப்பாக நகரங்களில் பொருளாதார இழப்புகள் பல ஆண்டுகளாக அதிகரித்து வருகின்றன.
- காலநிலை நிகழ்வுகளால் 2022-இல் மட்டும் இந்தியாவில் 2,755 பேர் இறந்திருக்கின்றனர். இறப்பு விகிதம் இமாச்சலப் பிரதேசத்தில் அதிகம். பெரும்பாலானோர் மழை வெள்ளத்தால் இறந்திருக்கின்றனர்.
- இதுபோன்ற நிகழ்வுகளால் 18 லட்சம் ஹேக்டேர் விளைநிலங்களும் 4 லட்சம் வீடுகளும் சேதமடைந்திருக்கின்றன. 70,000 கால்நடைகள் இறந்திருக்கின்றன.
- மக்கள்தொகையில் வெகுவிரைவில் சீனாவை விஞ்சப் போகும் இந்தியாவில், பெரும்பான்மை மக்கள் இயற்கை-காலநிலைப் பேரிடர்களால் பாதிக்கப்படும் அபாயத்தை எதிர்கொண்டுள்ளனர்.
- அமெரிக்கா, சீனாவுக்கு அடுத்தபடியாகப் பசுங்குடில் வாயுக்களை அதிகளவு உமிழும் மூன்றாவது பெரிய நாடாக இந்தியா உள்ளது.
- சீனா 2060 இலும் அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் 2050இலும் 'பூஜ்ய உமிழ்'வை எட்டுவதற்கு இலக்கு நிர்ணயித்துள்ளன.
- இந்நிலையில், 'பூஜ்ய உமிழ்வு' இலக்கை, 2070 இல் இந்தியா எட்டும் என கிளாஸ்கோவில் நடைபெற்ற காப் 26 காலநிலை உச்சி மாநாட்டில், 2021 நவம்பர் 1 அன்று பிரதமர் மோடி அறிவித்தார்.

- வயிற்றுவலி, வாந்தி, தலைவலி, மனநிலை பிறழ்வு, கடுமையான சிறுநீரக பாதிப்பு ஆகியவற்றை ஏற்படுத்தி, உயிரிழப்புக்கு வழிவகுக்கக்கூடியவை.
- இந்த மருந்துகள், வேறுநாடுகளிலும் சந்தை அனுமதியை பெற்றிருக்கக்கூடும் அல்லது அங்கீகாரமற்ற சந்தைகள் வாயிலாக விநியோகிக்கப்பட்டிருக்கலாம்.
- தரம் குறைந்த 2 மருந்துகளும் பாதுகாப்பற்றவை என்பதால், அவற்றை பயன்படுத்துவது குறிப்பாக குழந்தைகளுக்கு வழங்குவது தீவிர பாதிப்பையோ அல்லது உயிரிழப்பையோ ஏற்படுத்தக்கூடும் என்று தனது அறிக்கையில் உலக சுகாதார நிறுவனம் எச்சரித்துள்ளது.

**உரிமம் முடக்கம்**

- மேரியன் பயோடெக் நிறுவனத்தின் உற்பத்தி நிறுத்தப்பட்ட நிலையில் உரிமத்தை முடக்குவதற்கான எழுத்துப்பூர்வ உத்தரவு அளிக்கப்பட்டுள்ளது. அதனை அந்நிறுவனம் ஏற்றுக்கொண்டுள்ளது.
- மத்திய அமைப்புகளால் சேகரிக்கப்பட்ட மாதிரிகளின் ஆய்வு முடிவுகள் இன்னும் கிடைக்கப் பெறவில்லை என்றார்.

## சுகாதாரத்துறை

**தற்போதைய நிலவரம்**

- தமிழ்நாட்டின் சுகாதாரத்துறை மருத்துவக் கல்வி இயக்குநரகம் (DME), ஊரக நலப்பணிகள் இயக்குநரகம் (DMS), பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு இயக்குநரகம் என மூன்று இயக்குநரகங்களின் கீழ் தனித்துவம் மிக்கதாக செயல்பட்டு வருகிறது.
- 19,866 மருத்துவர்கள், 38,027 செவிலியர்கள், 60,181 இதர மருத்துவப் பணியாளர்கள் அர்ப்பணிப்புடன் இதில் பணியாற்றி வருகிறார்கள்.

**சர்வதேச தர ஒப்பீடு**

- பிரிட்டனின் மக்கள் தொகை 6.7 கோடி; தமிழ்நாட்டின் மக்கள் தொகை உத்தேசமாக ஏழேகால் கோடிக்கும் மேல் பிரிட்டனில் ஏறத்தாழ ஒன்றேகால் லட்சம் அரசு மருத்துவர்கள் உள்ளனர்.
- ஆனால் அந்நாட்டைவிட அதிக மக்கள் தொகை கொண்ட தமிழ்நாட்டில், 20,000க்கும் குறைவான அரசு மருத்துவர்களே உள்ளனர்.
- சராசரியாக ஆறு அல்லது ஏழு பிரிட்டிஷ் மருத்துவர்கள் செய்யும் பணியை, தமிழகத்தில் ஒரே ஒரு மருத்துவர் செய்து வருவதுதான் நிதர்சனம்.
- பிரிட்டனில் அதிக எண்ணிக்கையில் மருத்துவர்கள் இருந்தாலும், அவசர சிகிச்சை தேவைப்படும் நோயாளிகள்கூட சராசரியாக 10 அல்லது 12 மணி நேரம் காத்திருக்க வேண்டியுள்ளது.
- ஓர் ஆண்டுக்கும் மேலாக அறுவை சிகிச்சைக்காக அங்கு காத்திருப்பவர்கள் 4 லட்சம் பேர் ஒப்பீட்டளவில் தமிழ்நாட்டில் குறைவான எண்ணிக்கையில் மருத்துவர்கள் இருந்தாலும், ஒரே நாளில் உயர் சிறப்பு மருத்துவர்களிடம்கூட சேவையைப் பெறுவது சாத்தியம்.
- நோயாளிகளின் தரப்பிலிருந்து பார்த்தால், இது ஆரோக்கியமான அம்சம்தான்.

**செய்யவேண்டிய பணிகள்**

- தமிழ்நாட்டில் 37 அரசு மருத்துவக் கல்லூரிகள், 34 தனியார் மருத்துவக் கல்லூரிகள் என மொத்தமாக 71 மருத்துவக் கல்லூரிகள் உள்ளன. நாட்டிலேயே அதிக எண்ணிக்கை இது.
- சுகாதாரத் துறையில் உள்கட்டமைப்பு என்றால் கட்டிடங்களோ, கட்டிட வல்லுநர்களோ, கருவிகளோ இல்லை. மருத்துவர்களும், செவிலியர்களும்தாம் என்பதை அவர் சுட்டிக்காட்டினார்.
- எனவே தமிழகத்தில் சுகாதாரத் துறையை மேம்படுத்த வேண்டும் என்றால், அனைத்து அரசு மருத்துவமனைகளின் கட்டமைப்பை வலுப்படுத்த வேண்டும்.
- ஏற்கனவே 2019 இல் அரசாணை 4D2-இன் மூலம் குறைக்கப்பட்ட 600 அரசு மருத்துவர் பணியிடங்களை மீண்டும் உருவாக்க வேண்டும்.
- நோயாளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்றாற்போல் மருத்துவர் பணியிடங்கள் என்ற வகையில், குறைந்தது இரண்டு அல்லது மூன்று மடங்கு மருத்துவர் பணியிடங்களை ஏற்படுத்த வேண்டும்.

## சேது சமுத்திர திட்டம்

**அமைவிடம்**

- பாக் நீரிணை மற்றும் மன்னார் வளைகுடாவை இணைக்கும் ஆடம்ஸ் பாலத்தின் குறுக்கே வெட்டப்பட வேண்டிய கால்வாயின் பெயர்தான் சேதுசமுத்திரத் திட்டம்.
- இது தமிழகம் மற்றும் இந்திய நாட்டின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவும்.

**திட்டம் வடிவமைப்பு**

- 1860-ல் ரூ.50 லட்சத்தில் கமாண்டர் டெய்லர் என்பவரால் உருவாக்கப்பட்டது. இந்த திட்டம் 1955-ல் தமிழகத்தின் சிறந்த நிபுணர் ஏ.ராமசாமி முதலியார் தலைமையிலான குழு, 1963-ல் நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டம், 1964-ல் அமைக்கப்பட்ட டாக்டர் நாகேந்திர சிங் தலைமையிலான உயர்நிலைக்குழு ஆகியவை பல ஆண்டுகள் ஆய்வு செய்து, இந்த திட்டத்தை வடிவமைத்தன.
- இதன் வழித்தடங்கள் ஆய்வு செய்யப்பட்டு, சுற்றுச்சூழல் பாதிக்காத வகையில் திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டன.

**ரூ.2,427 கோடி மதிப்பில்....**

- பிரதமர் மன்மோகன் சிங்கால் 2004-ம் ஆண்டில் ரூ.2,427 கோடி மதிப்பில் இந்த திட்டத்தை செயல்படுத்த அனுமதிக்கப்பட்டது.
- முன்னாள் முதல்வர் மு.கருணாநிதி ஐக்கிய முற்போக்கு கூட்டணி தலைவர் சோனியா காந்தி முன்னிலையில், சேது சமுத்திரத் திட்டத்தை பிரதமர் மன்மோகன்சிங் 2005 ஜூலை 2-ம் தேதி தொடங்கி வைத்தார்.
- பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில், திட்டத்துக்கு முட்டுக்கட்டை போடப்பட்டது.

# 13-01-2023 NEWS

## Do not use two cough medicines of Indian company : World Health Organization

- The World Health Organization has warned against the use of two cough medicines from an Indian company accused of killing 18 children in Uzbekistan, citing them as substandard.

**Marion Biotech**

- The alert has been issued for AMBRONOL syrup and DOK-1 Max syrup, a cough medicine manufactured by Marion Biotech, Noida, Uttar Pradesh.
- Meanwhile, the state government has taken action by freezing the production license of Marion Biotech
- The Ministry of Health of Uzbekistan recently blamed the deaths of 18 children in Uzbekistan after taking DOK-1 Max syrup cough medicine.
- Also, the medicine was tested and found to contain unacceptable levels of ethylene glycol, the ministry said.
- Marion Biotech is the only company licensed to export AMBRONOL syrup and DOK-1 Max syrup cough medicines to Uzbekistan
- The company does not sell these cough medicines in India
- Following Uzbekistan's allegation, a team comprising officials from the Central Drug Quality Control Organization and the State Drug Control Department conducted an in-person inspection at Marion Biotech on December 29 and collected samples.
- They were sent to the Regional Drug Testing Laboratory in Chandigarh
- The company was also ordered to stop production of the cough medicine immediately.

## Climate change

- According to V Tirupupugzh, former advisor of the National Disaster Management Authority, India is at the 2nd place in the world in the number of people affected by climate change.
- There is a lack of awareness among Indians about the risks posed by disasters. Economic losses due to irresponsible planning and development activities especially in cities have been increasing over the years
- 2755 people have died in India due to climate events in 2022 alone
- Death rate is highest in Himachal Pradesh
- Most of them have died due to floods
- 18 lakh hectares of agricultural land and 4 lakh houses have been damaged due to such incidents
- 70 thousand cattle have died
- In India, which will soon surpass China in terms of population, the majority of people are at risk of being affected by natural climate disasters.
- India is the third largest emitter of greenhouse gases after USA and China
- China has set a target of zero emissions by 2060 and the US and EU by 2050.
- In this context, Prime Minister Modi announced on November 1, 2021 at the Climate Summit held in Glasgow that India will achieve the goal of zero emissions by 2070.

**Warning of WHO**

- Both cough medicines, AMBRONOL syrup and DOK-1 Max syrup have failed to meet the relevant standards
- No guarantee from the manufacturer regarding the safety and quality of these drugs has been made available to the World Health Organization
- Tests conducted in the laboratories of the Ministry of Health of Uzbekistan have found unacceptable levels of diethylene glycol and ethylene glycol
- These chemicals have been proven to be hazardous to humans
- It can cause abdominal pain, vomiting, headache, mood swings, severe kidney damage and lead to death.
- These drugs may be licensed in other countries or distributed through unauthorized markets
- The World Health Organization has warned in its report that both the low-quality drugs are unsafe and their use, especially when given to children, can cause serious harm or even death.

**License Suspension**

- Marion Biotech has been issued with a written order to terminate the license with production suspended
- The company has accepted it
- The test results of the samples collected by the central agencies were not yet available

## Department of Health

**Current status**

- The Department of Health of Tamil Nadu is uniquely functioning in three Directorates namely Directorate of Medical Education, Directorate of Medical Services & Directorate of Public Health and Disease Prevention
- 19,866 doctors, 38027 nurses, 60181 other medical personnel are working with dedication

**International benchmarking**

- The population of Britain is 6.7 crore
- Population of Tamil Nadu is estimated to be more than 7.25 crores
- There are approximately 1.25 lakh government doctors in Britain
- But Tamil Nadu, which has a larger population than that country, has less than 20 thousand government doctors
- It is a fact that only one doctor in Tamil Nadu is doing the work of an average of 6 or 7 British doctors
- Despite the large number of doctors in Britain, even patients for emergency cases have to wait 10 or 12 hours on average
- Four lakh people are waiting there for surgery for more than a year and although there are relatively fewer doctors in Tamil Nadu, it is possible to get services even from highly specialized doctors on the same day.
- From the patient's point of view, this is a healthy aspect

SURESH'

**Tasks to be done**

- Tamil Nadu has a total of seventy one medical colleges including 37 government medical colleges and 34 private medical colleges.
- This is the highest number in the country
- Infrastructure in healthcare does not mean buildings, builders or equipments. It was doctors and nurses
- Therefore, if we want to improve the health sector in Tamil Nadu, we need to strengthen the structure of all government hospitals

**Tasks to be done**

- Tamil Nadu has a total of seventy one medical colleges including 37 government medical colleges and 34 private medical colleges.
- This is the highest number in the country
- Infrastructure in healthcare does not mean buildings, builders or equipments. It was doctors and nurses
- Therefore, if we want to improve the health sector in Tamil Nadu, we need to strengthen the structure of all government hospitals




## Sethu Samudra Project

**Location**

- The Sethu Samudra Project is the name of the canal to be built across the Adams Bridge connecting the Palk Strait and the Gulf of Mannar.
- This will greatly help the development of Tamil Nadu and the country of India

**Project design**

- It was created by Commander Taylor in 1860 at a cost of Rs 50 lakhs
- This plan was designed by a committee headed by Tamil Nadu's best expert A Ramasamy Mudaliar in 1955, the Central Cabinet meeting in 1963 and Dr Nagendra Singh High Level Committee formed in 1964.
- Its routes were studied and project reports were prepared in an environmentally sound manner

**At a cost of Rs 2427 crore...**

- The scheme was sanctioned by Prime Minister Manmohan Singh in 2004 at a cost of Rs 2,427 crore.
- Prime Minister Manmohan Singh launched the Setusamudra project on 2nd July 2005 in the presence of former Chief Minister M Karunanidhi and UPA President Sonia Gandhi.
- The project was stalled while work was underway